Registered as a News Paper

பக்கங்கள் 06

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 08 | திருவள்ளுவர் ஆண்டு 2024 மாசி 08 | (14-02-1993) | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 862

## மன்னாரில் குண்டுவீச்சு கிளிநொச்சியில் காயமாம்

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி பிரதான பாதையில் சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்கள் குண்டுகளை வீசியதில் 12 பேர் காயம் அடைந்து வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஏ. எவ். பி. செய்தி நிறுவனம் தெரிவிக்கின்றது. இது தொடர்பாக இராணுவ உயர் அதிகாரியிடம் இந்த செய்தி நிறுவனம் கேட்டபோது தாம் கிளிநொச்சி மாவட்டத்தில் குண்டுவீசவில்லை என்றும் மன்னார் மாவட்டத்திலேயே விமானகுண்டுவீச்சு நடைபெற்றதாகவும் குண்டுவீச்சில் ஏற்பட்ட பாதிப்புகள் பற்றி தமக்கு தெரியாது என்றும் தெரிவித்துள்ளார். மேலும் அந்த இராணுவ அதிகாரி கருத்துத்

[5 ஆம் பக்கம் பார்க்க]

# போராட்டம் கல்விக்கு கவசம்

# கல்வி போராட்டத்திற்கு காப்பரண்

## கல்விக் கொள்கை பற்றி தலைவர் பிரபாகரன் விளக்கம்

"தாயக விடுதலைக்கு தம்மை அர்ப்பணிக்கும் தெரிவிற்கும், கல்விகற்கும் உரிமைக்கும் இடையில் நாம் என்றுமே முரண்பாட்டைக் கற்பிக்க முயலவில்லை. இரண்டுமே எமது சமூகத்தின் வாழ்வியக்கத்திற்கு இன்றியமையாதவை. போரும் கல்வியும் இணைந்த ஒரு வாழ்வு இன்று எமது வரலாற்றுத்தேவையாக உள்ளது. எமது போராட்டம் கல்விக்குக் கவசமாக இருப்பதுபோல, கல்வியும் எமது போராட்டத்திற்கு காப்பரணாக நிற்கவேண்டும். எமது விடுதலைப் போராட்டத்தின் உன்னதத்தை உணர்ந்து கொள்ளும் வகையில் மாணவ சமூகத்திற்கு விழிப்புணர்வை ஊட்டுவது எமது கல்விமான்களின் தேசிய கடமைப்பாடாகும்."

இவ்வாறு தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் சிறப்புத் தகைமைகளைப் பெற்ற மாணவர்களுக்கு தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினரால் பாராட்டும் பரிசிலும் வழங்கப்படுவதனையொட்டி, தமிழீழத் தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரன் அவர்களால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் முழு விபரமும் வருமாறு:

மனித வளர்ச்சிக்கும் சமூக மேம்பாட்டிற்கும் கல்வி ஆதாரமானது. ஆணிவேர் போன்றது.

கல்வி பெறும் உரிமை மனித சுதந்திரங்களின் அடிப்படையானது. அறியாமையிலிருந்து விழிப்புற்று, தனது வாழ்க்கை பற்றியும் தான் வாழும் உலகம் பற்றியும் அறிந்து கொள்வதற்கு ஒவ்வொரு தனிமனிதப் பிறவிக்கும் உரிமையுண்டு. தனது ஆற்றல்களை வளர்த்து, தனது ஆளுமையை மேம்படுத்தி, சுதந்திரமாகச் சிந்தித்துச் செயற்படும் உரிமை ஒவ்வொருவருக்கும் உரித்தானது.

## கல்வி நம் இனக்கட்டமைப்பை தாங்கி நிற்கும் ஒரு தூண்



## தலைவரின் பரிசும், பாராட்டும் மாணவருக்கு வழங்கப்பட்டன

[யாழ்ப்பாணம்]

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் நடத்தப்பட்ட தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் தேசிய மட்ட, மற்றும் மாவட்ட கோட்ட மட்டத்திலான சிறப்புத் தகைமைகள் பெற்ற மாணவர்களுக்கு, தலைவர் பிரபாகரனின் பரிசும், பாராட்டுப் பத்திரங்களும் நேற்று வழங்கப்பட்டன. இப்பரிசளிப்பு பாராட்டு விழா நேற்றுக்காலை யாழ். இந்துக் கல்லூரிகுமாரசுவாமி மண்டபத்தில் மிகவும் சிறப்புற நடைபெற்றது,

நேற்றுக்காலை 10.00 மணியளவில் ஆரம்பமான இவ்விழாவில் தமிழீழ தேசியக் கொடியை யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி ஏற்றிவைத்தார், மங்கள விளக்கை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜாவும் யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கமும் ஏற்றிவைத்தனர். இவ்விழாவிற்கு தலைமை

[6 ஆம் பக்கம் பார்க்க]

## கல்வி பெறும் சுதந்திரத்தை

## பிரெஞ்ச் வைத்தியர் யாழ். வந்தார்

கொழும்பிலிருந்து விசேட விமான மூலம் பலாலிக்கு வந்திருந்த ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகராலய ஜெனீவா தலைமையகத்தைச் சேர்ந்த ஆலோசகர் திரு. ரியூட்டர் என்பவருடன் பிரெஞ்ச் வைத்திய குழுவைச் சேர்ந்த டாக்டர் ஒருவரும் நேற்றுக்காலை குமண கப்பல் மூலம் காங்கேசன்துறையிலிருந்து பருத்தித்துறையை வந்தடைந்தனர். [30]

## கிளாலி மோதலில் ஒரு படை அதிகாரி காயம்

[கொழும்பு]

கிளாலிக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கு மிடையில் நடைபெற்ற மோதலில் கடற்படையைச் சேர்ந்த அதிகாரி ஒருவருக்கு காயம் ஏற்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை ஆதாரம் காட்டி பி.பி.ஸி. தெரிவித்தது.

## காவலரண்மீது தாக்குதல் ஒரு படை காயம்

[யாழ்ப்பாணம்]

வவுனியா மாவட்டத்தில் உள்ள மகாபச்சைக்கொடி என்ற இடத்துக்கும் நாவற்குளத்துக்கும் இடையில் அமைக்கப்பட்டிருந்த சிறிலங்கா காவல் அரண்கள் மீது விடுதலைப்புலிகள் நடாத்திய திடீர்த்தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் காயமடைந்துள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இத்தாக்குதல் நடாத்தப்பட்டது. இதைத்தொடர்ந்து படையினர் குடிமனைகளை நோக்கி எறிகணைத் தாக்குதலை நடாத்தினர்.

## மாணவி கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உன்னஆரையம்பதி என்ற இடத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் நடாத்திய தாக்குதலில் பாடசாலை மாணவி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த 6 ஆம் திகதி நடை

போராட்டத்தின் உன்னதத்தை உணர்ந்து கொள்ளும் வகையில் மாணவ சமூகத்திற்கு விழிப்புணர்வை ஊட்டுவது எமது கல்விமான்களின் தேசிய கடமைப்பாடாகும்.''

இவ்வாறு தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் சிறப்புத் தகைமைகளைப் பெற்ற மாணவர்களுக்கு தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினரால் பாராட்டும் பரிசிலும் வழங்கப்படுவதனையொட்டி, தமிழீழத் தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரன் அவர்களால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் முழு விபரமும் வருமாறு:

மனித வளர்ச்சிக்கும் சமூக மேம்பாட்டிற்கும் கல்வி ஆதாரமானது. ஆணிவேர் போன்றது.

கல்வி பெறும் உரிமை மனித சுதந்திரங்களின் அடிப்படையானது. அறியாமையிலிருந்து விழிப்புற்று, தனது வாழ்க்கை பற்றியும் தான் வாழும் உலகம் பற்றியும் அறிந்து கொள்வதற்கு ஒவ்வொரு தனிமனிதப் பிறவிக்கும் உரிமையுண்டு. தனது ஆற்றல்களை வளர்த்து, தனது ஆளுமையை மேம்படுத்தி, சுதந்திரமாகச் சிந்தித்துச் செயற்படும் உரிமை ஒவ்வொருவருக்கும் உரித்தானது.

# கல்வி நம் இனக்கட்டமைப்பை தாங்கி நிற்கும் ஒரு தூண்

இந்த மூலாதார உரிமையைப் பறித்தெடுத்து தமிழீழத்தின் கல்வித் துறையை சிதைத்துவிட சிங்களப் பேரினவாதம் நீண்ட காலமாகவே முயன்று வருகிறது. இதன் விளைவால் எமது சமூகத்தின் கல்வி வாழ்வு பாரதூரமான அளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கிறது.

கல்வியும், மொழியும், பண்பாடும், நிலமும் எமது இனக் கட்டமைப்பை தாங்கி நிற்கும் தூண்கள். இந்ததூண்களைத் தகர்த்துவிட எதிரி முனைகிறான். இனத்தனித்துவத்தை அழிப்பது அவனது நோக்கம்.

நாம் எமக்கு உரித்தான உரிமைகளை வென்றெடுக்கப் போராடுகிறோம். அதே வேளை, எமது சமூகவாழ்விற்கு ஆதாரமான அமைப்புகள் அழிந்துபோகாது பாதுகாக்கவும் நாம் போராட வேண்டியிருக்கிறது. ஆகவே இரு முனைகளில், ஒரேவேளையில் போராட வேண்டியவர்களாக நாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். இது தவிர்க்கமுடியாத ஒரு வரலாற்று நிர்ப்பந்தம்.

தமிழீழ மக்களின் விடுதலை இயக்கம் என்ற ரீதியில் இந்த இரு முனைப் போராட்டத்தை முன்னெடுப்பதில் நாம் தெளிவோடு, உறுதியோடு, தீர்க்கமாக உழைத்து வருகிறோம். இந்த இரு முனைகளுக்கும் இடையில் வெடிக்கும் முரண்பாடுகளைக் களைந்து விடுவதிலும் நாம் நிதானமாகச் செயற்படுகிறோம்.

உரிமைகளுக்காக நாம் தொடுத்த போராட்டம் இன்று உயிர் வாழ்வதற்கான போராட்டமாக விஸ்வரூபம் பெற்றிருக்கிறது. அன்றொருகாலம் நாம் அமைதி வழியில் உரிமை கேட்டோம். இன்று நாம் இரத்தம் சிந்திப் போராட வேண்டியிருக்கிறது. உயிர்ப்பலி கொடுத்து உயிர்வாழ வேண்டியிருக்கிறது.

இன அழிவைத்தடுத்து எமது மண்ணையும், மக்களையும் பாதுகாப்பது இன்று எமது விடுதலை இயக்கத்தின் முதன்மையான கடனாக உள்ளது. இதற்குப் போராடியே ஆக வேண்டும். போராடி வாழ்வதைத்தவிர எமக்கு வேறு வழியில்லை.

# போராளிகள் அர்ப்பணிப்பை நாம் கௌரவிக்க வேண்டும்

போராடுவதற்கு போராளிகள் வேண்டும். எதிரியுடன் போர் நடத்த ஒரு படை வேண்டும். இந்த விடுதலைப் படை இல்லாது போனால் எமது இனத்தின் அழிவை தடுத்து நிறுத்த முடியாது இந்தப் போராளிகளை, இந்த இளம்புலி வீரர்களை, நாம் எமது மக்கள் சமுதாயத்திலிருந்தே அணிதிரட்ட வேண்டியுள்ளது. நாம் வலுக்கட்டாயமாக ஆட்சேர்ப்பதில்லை. இது ஒரு தேசிய விடுதலைப்போர் என்பதால் சுயவிருப்பிலேயே இளம் போராளிகள் எமது இயக்கத்தில் இணைந்து கொள்கிறார்கள். தமது சுயத்தைத் துறந்து, தமது சொந்தவாழ்வின் சுகபோகங்களைத் துறந்து, பந்தத்தின் பற்றுற

(6ஆம் பக்கம் பார்க்க)

# உலக சமூகத்திற்கு நிகராக தமிழீழ கல்வி வளர வேண்டும்

**- இளங்குமரன்**

தமிழீழ விடுதலையை வென்றெடுப்பதற்காக போராடிக் கொண்டிருக்கும் நாம் தமிழீழத்தை வென்றெடுக்கின்றபோது எமது சமுதாயம் உலகின் ஏனைய சமுதாயங்களுக்கு நிகராக நிற்கவேண்டுமானால் எமது கல்விநிலையை துரிதமாகவும் துல்லியமாகவும் நாம் வளர்த்துக் கொள்ளவேண்டிய நிலை எமக்குண்டு. இவ்வாறு யாழ். இந்துக் கல்லூரியில் தமிழீழ கல்விப் பொதுத் தேர்வில் சிறப்புத் தகைமை பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் வைபவத்தில் உரையாற்றிய தமிழீழ கல்விப் பொறுப்பாளர் வே. இளங்குமரன் தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்:

மக்களுக்கான போரை நடத்திக் கொண்டிருக்கின்ற அதேவேளையிலே எமது மக்களுக்கு ஆற்றவேண்டிய கடமையை உணர்ந்து எமது சமுதாயத்தின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக இயக்

[5 ஆம் பக்கம் பார்க்க]



வவுனியா மாவட்டத்தில் உள்ள மகாபச்சைக்கொடி என்ற இடத்துக்கும் நாவற்

# தலைவரின் பரிசும், பாராட்டும் மாணவருக்கு வழங்கப்பட்டன

[யாழ்ப்பாணம்]

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் நடத்தப்பட்ட தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் தேசிய மட்ட, மற்றும் மாவட்ட கோட்ட மட்டத்திலான சிறப்புத் தகைமைகள் பெற்ற மாணவர்களுக்கு, தலைவர் பிரபாகரனின் பரிசும், பாராட்டுப் பத்திரங்களும் நேற்று வழங்கப்பட்டன. இப்பரிசளிப்பு பாராட்டு விழா நேற்றுக்காலை யாழ். இந்துக் கல்லூரிகுமாரசுவாமி மண்டபத்தில் மிகவும் சிறப்புற நடைபெற்றது.

நேற்றுக்காலை 10.00 மணியளவில் ஆரம்பமான இவ்விழாவில் தமிழீழ தேசியக் கொடியை யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி ஏற்றிவைத்தார், மங்கள விளக்கை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜாவும் யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கமும் ஏற்றிவைத்தனர். இவ்விழாவிற்கு தலைமை

[6 ஆம் பக்கம் பார்க்க]

# கல்வி பெறும் சுதந்திரத்தை தலைவர் வலியுறுத்தியுள்ளார்

**- அன்ரன் பாலசிங்கம்**

அறியாமையிலிருந்து விடுதலை பெறுவதற்கு கல்வியைக் கற்று விழிப்புணர்வை வளர்த்துக் கொள்வதற்கும் உலகத்தைப்பற்றியும் வாழ்க்கையைப்பற்றியும் அறிந்து கொள்வதற்கும் ஒருவன் தனது ஆளுமையை தனது ஆற்றல்களை வளர்த்துக் கொள்வதற்கும் அவனுக்கு உரிமை உண்டு. இது அடிப்படையான மனித சுதந்திரம் இதை பெறுவதற்கு எவருக்கும் உரிமையுண்டு இந்த மிகமுக்கியமான ஆணித்தரமான கருத்தை எங்கள் தலைவர் தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

இவ்வாறு நேற்று யாழ். இந்துக் கல்லூரியில் தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் சிறப்புத்தகைமைபெற்றமாணவர்களுக்கு பரிசில் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார். தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் அறிக்கையை

(5 ஆம் பக்கம் பார்க்க)

# பூநகரியில் இராணுவத்தை வாபஸ்பெற அரசு மறுப்பு

**- ஐ நா. அதிகாரி புலிகளிடம் தெரிவிப்பு**

[யாழ்ப்பாணம்]

கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதை யூடான பொதுமக்களின் போக்குவரத்துக்கு வசதியாக பூநகரி, சங்குப்பிட்டிப் பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினரை வாபஸ் பெற்றுக்கொள்வதற்கு சிறிலங்கா அரசு தயாராக இல்லை.

இவ்வாறு நேற்று மாலை அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர்ஸ்தானிகராலய அதிகாரிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி பகுதிகளில் இராணுவத்தினரை தொடர்ந்தும் நிறுத்திவைத்து இராணுவ நிலைகளுக்கூடாக பொதுமக்களை போக்குவரத்துக்காக அனுமதிப்பதையே சிறிலங்கா அரசு விரும்புகிறது. மேலும் பொதுமக்களின் மேற்படி போக்குவரத்துப் பாதையில் மேலதிக சோதனை நிலையங்களையும், காவல் நிலையங்களையும் அமைக்கவும் இந்த நிலையங்களில் பொதுமக்களைச் சோதனையிடவும் சிறிலங்கா அரசு திட்டமிட்டிருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதை யூடாக பொதுமக்களின் போக்குவரத்தை ஏற்படுத்துவது தொடர்பாக சிறிலங்கா அரச தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடாத்தியதைத்தொடர்ந்து அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய அதிகாரி ஒருவர் நேற்று யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தார்.

நேற்று மாலை 5-00 மணி

[5 ஆம் பக்கம் பார்க்க]

# கிளாலி கடலில் தடையை நீக்க புலிகள் யோசனை

பூநகரி - சங்குப்பிட்டிப் பகுதிகளிலிருந்து இராணுவத்தினரை வாபஸ் பெற்றுக் கொள்வதில்லையென்பதில் சிறிலங்கா அரசு உறுதியாக உள்ளதைத் தொடர்ந்து குடாநாட்டுக்கான பொதுமக்களின் போக்குவரத்தைச் சீராக்குவதற்கு விடுதலைப் புலிகள் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகளிடம் புதிய யோசனை ஒன்றைத் தெரிவித்துள்ளனர்.

இப் புதிய யோசனைப்படி கிளாலிக் கடற்பரப்பினூடாக பொதுமக்களைப் போக்குவரத்திற்கு அனுமதிக்க வேண்டும் என்றும், மேற்படி கடற்பரப்பை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு சிறிலங்கா அரசு விதித்திருக்கும்தடையை நீக்கவேண்டும் என்றும் இதன் மூலம் இக்கடற்பரப்பினூடாக படகுகளின் மூலமாக பொதுமக்கள் போக்குவரத்துச் செய்ய முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகள் தெரிவித்த இந்த யோசனையை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய பிரதிநிதிகள் அரசாங்கத்திடம் தெரியப்படுத்துவர் என அறியவருகிறது.

...க்கப்பட்டிருந்த சிறிலங்கா காவல் அரண்கள் மீது விடுதலைப்புலிகள் நடாத்திய திடீர்த்தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் காயமடைந்துள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இத்தாக்குதல் நடாத்தப்பட்டது. இதைத்தொடர்ந்து படையினர் குடிமனைகளை நோக்கி எறிகணைத் தாக்குதலை நடாத்தினர்.

## மாணவி கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்வஆரையம்பதி என்ற இடத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் நடாத்திய தாக்குதலில் பாடசாலை மாணவி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். கடந்த 6 ஆம் திகதி நடைபெற்ற இச் சம்பவத்தில் பாக்கியராஜ்கவிதா என்றமாணவி கொல்லப்பட்டார்.

## பயணிகள் யாழ். வந்தனர்

(வவுனியா)

கிளிநொச்சியிலும், ஆலங்கேணிப் பகுதியிலும் படகுப் பயணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த பல்லாயிரக்கணக்கான பயணிகள் யாழ். வந்து சேர்ந்தனர்.

கடந்தசிலதினங்களாகஇடம்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


### மிருதங்கம்

புதிய மிருதங்கம் உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் ஒருக்கு சலுகையுடன் செய்து தரப்படும். தரகர் தேவையில்லை. நேரில் வரவும் கோவிந்தபிள்ளை விஜயகுமார், மிருதங்க தொழில் நிலையம், 192/1 நாவலர்வீதி, பெருமாள் கோவிலடி. யாழ்ப்பாணம். (4270)

### மகாதேவா ஜோதிடம்

5-3-1993 இல் சனிமாற்றம் இலங்கைக்கும்- உலகத்திற்கும் நடக்கவிருப்பது — விபரங்களுடன் வெளிவந்து விற்பனையாகின்றது தினசரி காலை 9.00 தொடக்கம் மாலை 6.00 மணிவரை சந்திக்கலாம். 140, செல்வர் வீதி கல்வியங்காடு நல்லூர். [4268]

### உடன் தேவை

புதிதாக, கரைவலை தொழிலை மேற்கொள்வதற்கு. நல்ல நிலையிலுள்ள கரைவலை தேவை. 17½ அடி கண்ணாடி இழைவள்ளமும் தேவை. நல்ல விலை கொடுக்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: சி திருநாவுக்கரசு சின்னப் பிள்ளையார் கோவிலடி வி. எம். றோட் பருத்தித்துறை. (4275)

### கலண்டர்கள் விற்பனைக்குண்டு

விற்றுமுடிக்கும் நோக்குடன் திருவள்ளுவர் நாட்காட்டி மற்றும் 3 அளவுகளில் படக் கலண்டர்கள் மலிவுவிலையில் பெற்றுக் கொள்ளலாம். 48 மணி நேரத்தில் தங்கள் விலாசம் பதிப்பித்துக் கொடுக்கப்படும். ஸ்ரீகாந்தா அச்சகம். புத்தகசாலை 330, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (4173)

### 'நியூ விகரேஸ்'

ரெலிவிசன் வீடியோ டெக், றேடியோ, ரேப்றெக்கோடர், எலெக்ரோனிக் கமறா. கைக்கடிகாரங்கள் மற்றும் மின்சார வேலைகள் எபேஜன்சி லைற்ப நறிகள் திருத்தி சார்ச் செய்தல், பாடல்கள் பதிவு செய்தல், வீடியோ படப்பிடிப்புகள் யாவும் நிபுணர்களால் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும். 'நியூ விகரேஸ்' எலெக்ரோனிக் கொம்பளெக்ஸ். மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம். (4060)



குருநகர் புனிதர் யாகப்பர் கலை மன்றத்தின் மற்றுமோர் பிரமாண்டமான படைப்பு

## "வீரமாதேவி"

(சோழர் வரலாற்று நாட்டுக் கூத்து)

காலம் :- 14-02-1993 ஞாயிறு (இன்று)
பி. ப. 6.30 மணி.

இடம் :- குருநகர் கலை அரங்கு.

[ஆசனங்கள் குருநகர் கலை அரங்கில் காலை முதல் பதிவு செய்யலாம்]

(சி- 6007)


## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

| அகிலத்தில் அவதரிப்பு | அரக்கர்களின் அழிப்பு |
|---|---|
| 17 | 02 |
| - | - |
| 05 | 01 |
| - | - |
| 1944 | 1993 |



## அமரர் திரு. ஆ. தர்மராஜா

உதவிக் கல்விப் பணிப்பாளர்

(கல்வித்திணைக்களம் - கிளிநொச்சி)

தர்மமே! தர்மராஜாவே! நீ சாதாரண மானிடமல்ல
மனிதருள் மாணிக்கம்; மங்கா ஒளிவிளக்கு
அன்பின் பிறப்பிடம்; அமைதியின் உறைவிடம்
பண்பின் திருவுருவம்; பார்வையிலே தெய்வம்
கடமை வீரனாய் உறுதிகொண்டு சென்றதனால்
கொலைக்கடலில் உங்கள் நிஜ உருவை சிதைத்தீர்
கண்ணியத்தின் காவலனாய் சேவை புரிந்ததனால்
எம் மத்தியில் தங்கள் நிழல் உருவை விதைத்தீர்

ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு நிம்மதி ஏற்படவும், தங்கள் ஆத்மா சாந்தியடையவும், எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்,
மாணவர்கள்
பளை மகாவித்தியாலயம்

(4277)

## நினைவு கூருகின்றோம்...
## 1993-2-14

1986 ஆம் ஆண்டு இதேதினத்தில் கிளிநொச்சி- கரடிப்போக்குப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட வாகனச் சாரதியான தமிழ்ப் பொதுமகன்.

1987 ஆம் ஆண்டு மட்டு - கிரான் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

**துரை** (அழகிப்போடி மயில்வாகனம் - கிரான்-மட்டு.)

திருமலை - இலக்கந்தைப் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடி படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

★ **பறக்குர்புறா** (-சிவஞானசுந்தரம் - சேனையூர், மூதூர் - திருமலை)

யாழ் - கைதடிப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வாகன வெடி விபத்தில் எமைப்பிரிந்த

**கவர்** (கதிர்காமு நகுலேஸ்வரன் - கோவில் புளியங்குளம், இரணைஇலுப்பைக்குளம் - வவுனியா)

**மேஜர் கேடில்ஸ்** (மகாலிங்கம் திலீபன் - 'ஸ்ரீசந்தா வாசா', கண்டாவளை பரந்தன் - கிளிநொச்சி)

(மத்தியகுழு உறுப்பினர்)

**லெப். கேணல் அற்புதன்- பொன்னம்மான்** (செல்லப்பா யோகரத்தினம் குகன் - கலட்டி, யாழ்.)

**கப்டன் வாசு** (உருத்திராபதி சுதாகர் - நெடியகாடு, வல்வெட்டித்துறை - யாழ்.)

**லெப். சித்தார்த்தன்** (வைத்திலிங்கம் வசீகரன் - 20, சுபாஸ் வீதி. சுண்டுக்குளி, யாழ்.)

**2-ம் லெப். பரன்** (கிருஷ்ணர் அருச்சுனன் - கொன்டக்கட்டை ஒழுங்கை, வல்வெட்டித்துறை - யாழ்.)

**யோகேஸ்** (சுந்தரம் தனபாலசிங்கம் - ஆழியவளை, தாளையடி - யாழ்.)

**தேவன்** (தம்பிப்பிள்ளை வசந்தகுமார் - மீசாலை, சாவகச்சேரி - யாழ்.)

**குமணன்** (சுந்தையா மோகனலிங்கம் - மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி - யாழ்.)

**அக்பர்** (அருளம்பலம் யோகநாதன் - மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி - யாழ்.)

இதே சம்பவத்தில் உயிரிழந்த பொதுமக்கள்.

1988 ஆம் ஆண்டு கிளிநொச்சி - பூநகரி, வெட்டுக்காட்டுப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**தர்மேந்திரா** (இராசதுரை றொபேட் கெனடி-இல 68, டேவிட்வீதி, குருநகர், யாழ்)

1989 ஆம் ஆண்டு மணலாறு-குமுழமுனைப்பகுதியில் இந்தியப்படையினரின் காவலரண் மீது மேற்கொள்ளப் பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய

**கப்டன் மோகன்** (சிவகுமார் குணலிங்கம்-7-ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு-மணலாறு)

1991 ஆம் ஆண்டு மட்டு-மணற்பிட்டி சிறிலங்கா இராணுவ மினி முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய

**லெப். தயானி** (தாமோதரம்பிள்ளை இருபானந்தலிங்கம்-ஆரையம்பதி-மட்டு)

**முகேஷ்** (சித்தாண்டி-மட்டு)

1992 ஆம் ஆண்டு மட்டு-உன்னிச்சைப் பகுதியில் ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய

**நிவாஸ்கர்-சிதரன்** (கணபதிப்பிள்ளை நித்தியதாஸ்- திருக்கோயில்-அம்பாறை)

**லெப். போசன்** (நல்லசாமி வேதிதாசன்-திருவள்ளுவர் வீதி, பாண்டிருப்பு-01, கல்முனை-அம்பாறை)

**மேஜர் லதீப்-ரவிநாதன்** (கந்தையா சண்முகநாதன்-பிரதான வீதி, கிரான் மட்டு)

**லெப். சலாதரன்** (இரத்தினசிங்கம் தேவநேசன்- தேவபுரம், முறக்கொட்டாஞ்சேனை, மட்டு.)

**2-ம் லெப் மார்க்கோஸ்- ஆனந்தமோகன்** (கந்தசாமி கமலநாதன் - கறுவாக்கேணி, வாழைச்சேனை - மட்டு.)

**விஸ்வலிங்கம்** (பூபாலப்பிள்ளை கிருஷ்ணானந்தன்- தபாற்கந்தோர் வீதி, கிரான்-மட்டு)

**றோசான்-சசிக்குமார்** (நாகையா ரவிசங்கர் - முகத்துவாரம் - மட்டு.)

**ஜெயநாதன்** (கைலாயபிள்ளை நடேசலிங்கம் - கிண்ணியடி, வாழைச்சேனை - மட்டு.)

**குணா** (கணபதிப்பிள்ளை செல்வராசா - சித்தாண்டி- மட்டு.)

**டானியல்- ஆனந்தன்** (வேல்முருகுசெல்வராசா- கிரான் - மட்டு.)

**பழனி** (தங்கராசா தயாபரன் - களுமுந்தன்வெளி, குருக்கள்மடம் - மட்டு.)

**யாவீர்** (முத்தையா ஜெகநாதன் - மட்டக்களப்பு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(இ/6006)

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

14-02-87 அன்று கைதடியில் எதிர்பாராத வெடிவிபத்தில் வீரச்சாவை தழுவிய

மற்றும் 3 அளவுகளில் படக் கலண்டர்கள் பதிவுவிலையில் பெற்றுக் கொள்ளலாம். 48 மணி நேரத்தில் தங்கள் விலாசம் பதிப்பித்துக் கொடுக்கப்படும். ஸ்ரீகாந்தா அச்சகம். புத்தகசாலை 330, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (4173)

## 'நியூ விகரேஸ்'

ரெவின்சன் வீடியோ டெக், றேடியோ, ரேப்றெக்கோடர், எலெக்ரோனிக் கமறா. கைக்கடிகாரங்கள் மற்றும் மின்சார வேலைகள் எபேஜன்சி லைற் பழுதுகள் திருத்தி சார்ச் செய்தல். பாடல்கள் பதிவு செய்தல், வீடியோ படப்பிடிப்புகள் யாவும் நிபுணர்களால் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும். 'நியூ விகரேஸ்' எலெக்ரோனிக் கொம்பனெக்ஸ், மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம். (4060)

## திருக்கணித பஞ்சாங்கம்

ஸ்ரீமுக புதுவருட (1993-94) திருக்கணித பஞ்சாங்கம் விற்பனையாகிக்கொண்டிருக்கிறது வியாபாரிகளுக்குத் தகுந்த கமிஷன் உண்டு விலை ரூபா 65 00 பூபாலசிங்கம் புத்தகசாலை. யாழ்ப்பாணம். (4281)

## "வீரமாதேவி" நாட்டுக் கூத்து

குருநகர் புனித யாகப்பர் கலைமன்றம் பெரும் பொருள் செலவில் தயாரித்துள்ள "வீரமாதேவி" சோழர் வரலாற்று நாட்டுக்கூத்து இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 6 30 மணிக்கு குருநகர் கலை அரங்கில் மேடையேறும்.

அண்ணாவியார் ம. சாமிநாதனின் மேற்பார்வையில் கவிஞர் பி மிக்கேல்பிள்ளை உருவாக்கிய மேற்படி நாட்டுக் கூத்தில இருபதுக்கும மேற்பட்ட பழைய, இளந்தலைமுறைக் கலைஞர்கள் பங்கெடுக்கின்றனர். (21)

## குமண இன்று பறப்படும்

(நேர்வியடி)

பருத்தித்துறையில் பொருள்களை இறக்கும் குமண கப்பல், அரச திணைக்கள உயரதிகாரிகளை ஏற்றிக்கொண்டு இன்று (14-2-93) மாலை இங்கிருந்து திருமலைக்குச் செல்கின்றது.

இக் கப்பல், திருமலையில் தங்கியுள்ள, கொழும்பில் சிகிச்சை பெற்ற நோயாளிகளை ஏற்றிக்கொண்டு 16-ம் திகதி பருத்தித்துறைக்கு வந்து சேரும்

குமண மீண்டும் 18-ம் திகதி நோயாளர்களுடனும், தபால் பொதிகளுடனும் திருமலைக்குப் புறப்படுமென துறைமுக வட்டாரங்கள் தெரிவித்தன. (30)

---

அன்பின் பிறப்பிடம்; அமைதியின் உறைவிடம் பண்பின் திருவுருவம்; பார்வையிலே தெய்வம் கடமை வீரனாய் உறுதிகொண்டு சென்றதனால் இனாலிக்கடலில் உங்கள் நிஜ உருவை சிதைத்தீர் கண்ணியத்தின் காவலனாய் சேவை புரிந்ததனால் எம்மத்தியில் தங்கள் நிழல் உருவை விதைத்தீர்

ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு நிம்மதி ஏற்படவும், தங்கள் ஆத்மா சாந்தியடையவும், எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்
பளை மகாவித்தியாலயம்

(4277)

---

அக்பர் (அருளம்பலம் யோகநாதன் - மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி - யாழ்.)

இதே சம்பவத்தில் உயிரிழந்த பொதுமக்கள்.

1988ஆம் ஆண்டு மிஸ்நொச்சி - பூநகரி, வெட்டுக்காட்டுப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

தர்மேந்திரா (இராசதுரை றொபேட் கெனடி-இல 68, டேவிட்வீதி, குருநகர், யாழ்)

---

நினைவு கூருகின்றோம்.

★ இக்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(இ/6006)

---

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

14-02-87 அன்று கைதடியில் எதிர்பாராத வெடிவிபத்தில் வீரச்சாவை தழுவிய

## 10 வேங்கைகளை நினைவு கூருகின்றோம்

- இதே நிகழ்வில் உயிர்நீத்த பொதுமக்கள் நினைவாகவும்



லெப் கேணல்
**பொன்னம்மான்**
யோகரத்தினம் குகன்
யாழ்ப்பாணம்



மேஜர்
**கேடில்ஸ்**
மகாலிங்கம் திலீபன்
கண்டாவளை

| | | |
|---|---|---|
| 2ஆம் லெப்டினன்ட்<br>**பரன்**<br>கிருஷ்ணன் அருச்சுனன்<br>வல்வெட்டித்துறை | வீரவேங்கை<br>**அக்பர்**<br>அருளம்பலம் யோகநாதன்<br>மட்டுவில் | வீரவேங்கை<br>**குமணன்**<br>கந்தையா மோகனலிங்கம்<br>மட்டுவில் |

| | | | | |
|---|---|---|---|---|
| கப்டன்<br>**வாசு**<br>உருத்திராபதி சுதாகர்<br>வல்வெட்டித்துறை | லெப்டினன்ட்<br>**சித்தார்த்தன்**<br>வைத்திலிங்கம் வசிகரன்<br>சுண்டுக்குளி | வீரவேங்கை<br>**தேவன்**<br>தம்பிப்பிள்ளை வசந்தகுமார்<br>மீசாலை | வீரவேங்கை<br>**யோகேஸ்**<br>சுந்தரம் தனபாலசிங்கம்<br>தாளையடி | வீரவேங்கை<br>**கவர்**<br>கதிர்காமு நகுலேஸ்வரன்<br>வவுனியா |

**தவறுகள் திருத்தப்படவேண்டியவை**
**நியாயப் படுத்த வேண்டியவை அல்ல**
- மேஜர் கேடில்ஸ்

கைத்தொழில் வர்த்தகர் சங்கம், சாவகச்சேரி


(3377)

# 6ஆம் ஆண்டு வீரவணக்கம்

**14.2.1987-ம் ஆண்டு நாவற்குழி சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்புக்காக உருவாக்கப்பட்ட தண்ணீர்த் தாங்கி தவறுதலாக வெடித்ததில் வீரச்சாவடைந்த பத்து வேங்கைகளுக்கு வீரவணக்கத்தையும், இச்சம்பவததில் உயிர் நீத்த பொதுமக்களுக்கு நினைவஞ்சலியையும் காணிக்கையாக்குகின்றோம்.**



கப்டன் வாசு
(உருத்திராபதி சுதாகர்)
வல்வெட்டித்துறை



லெப். கேணல் பொன்னம்மான்
(யோகரத்தினம் குகன்)
யாழ்ப்பாணம்



வீரவேங்கை தேவன்
(தம்பிப்பிள்ளை வசந்தகுமார்)
மீசாலை



லெப். சித்தார்த்தன்
(வைத்திலிங்கம் வசிகரன்)
சுண்டுக்குளி



வீரவேங்கை குமணன்
(கந்தையா மோகனலிங்கம்)
மட்டுவில்




2ம் லெப. பரன்
(கிருஷ்ணன் அருச்சுனன்)
வல்வெட்டித்துறை



மேஜர் கேடில்ஸ்
(மகாலிங்கம் திலீபன்)
கண்டாவளை



வீரவேங்கை அக்பர்
(அருளம்பலம் யோகநாதன்)
மட்டுவில்



வீரவேங்கை யோகேஸ்
(சுந்தரம் தனபாலசிங்கம்)
தாளையடி



வீரவேங்கை கவர்
(கதிர்காமு நகுலேஸ்வரன்)
வவுனியா

**14. 02. 1993 ஞாயிற்றுக்கிழமை மாலை 7-00 மணிக்கு கைதடி வடக்கில் நினைவுக்கல் திறந்து வைக்கப்படும். இந்நிகழ்விற்கு அனைத்து மக்களையும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.**

(சி-6019)

**- தென்மராட்சி மக்கள்**

## 31-ம் நாள் நினைவு அழைப்பு

### கடற்புலி லெப். அமுதன்

[அலோசியஸ் ஜான்சன்]

15-02-93 திங்கள் பிற்பகல் 4 மணியளவில் பரலோக மாதா தேவாலயத்தில் நடைபெறும் திருப்பலிப் பூசையிலும், தொடர்ந்து வீட்டில் நடைபெறும் தேநீர் விருந்திலும் கலந்துகொள்ளுமாறு அனைத்து போராளிகள், உற்றார், உறவினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

7/7, 2-ம் குறுக்குத் தெரு, -பெற்றோர்.
நாவாந்துறை. (சி- 5959)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



வீரப்பிறப்பு: 28 — 08 — 1978

வீரச்சாவு: 01 — 01 — 1993

### லெப். வெள்ளைத்தேவன்

(ஏாகசபை கட்சன் ஜெயதாசன்)

அணையாத அகல்விளக்கே அன்பான ஜெயதாசனே
துணையாகத் தமிழ்த்தாயின் துயர்துடைக்கச் சென்றவனே
இணையேதும் இல்லாமல் ஈழத்தாய் நினைவோடு
அணையாத கனவுகளை உளத்திருத்திச் சென்றாயே.

14-02-93 இன்று 45ஆம் நாள் நினைவு நிகழ்ச்சியிலும், மதிய போசனத்திலும் சகபோராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உன் நினைவோடு வாழும்.

— அப்பா, அம்மா
(திரு. திருமதி கட்சன்)
சகோதரி, தம்பிமார்,
அம்மம்மா, பெரியம்மா,
மாமன்மார், சின்னம்மா, மச்சான்.

ஓடக்கரை வீதி,
சங்கானை.
4273)

## இடைக்கால தேர்தல் இல்லை

(டில்லி)

நாட்டின் எதிர்கால நலன்களை மனதில் கொண்டு இடைக்காலத் தேர்தல்கள் எதுவும் நடத்தப்பட மாட்டாது என்று பிரதமர் பி.வி. நரசிம்மராவ் கூறியுள்ளார். திரிபுரா மாநிலத்தில் பல்வேறு இடங்களிலும் பொதுக் கூட்டங்களில் பேசிய அவர் மேலும் கூறுகையில், தமது அரசு ஐந்தாண்டு காலமும் பதவி வகிக்கும் என்றும் குறிப்பிட்டார்.

## உணவு பங்கீட்டுஅட்டை மீள் பரிசிலனை

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் அ. உ. உணவுப் பங்கீட்டு அட்டைகள் மீள்பரிசீலனை செய்யப்பட்டு புதிய உணவுப் பங்கீட்டு அட்டைகள் வழங்கும் நடவடிக்கைகள் கிராமசேவை அலுவலர்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அ. உ. உணவுப்பங்கீட்டு அட்டைகளை வைத்திருப்போர் தமது உணவுப்பங்கீட்டுஅட்டைகளை மீள்பரிசீலனை செய்து புதிய அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. ச. முருகேசபிள்ளை அறிவித்துள்ளார். (25]

## அடுத்தவார இறுதியில் கப்பலொன்று வரும்

யாழ். குடாநாட்டிற்கான ஒரு தொகுதி உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு கப்பல் ஒன்று புறப்படவுள்ளதாகவும், இது அடுத்தவார இறுதியில் பருத்தித்துறை இறங்குதுறையை வந்தடையும் எனவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## கரண்டிகள் திருட்டு

ஏயார் லங்கா விமான நிறுவனத்திற்கு சொந்தமான உணவு பரிமாறும் கரண்டிகள் திருடப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவற்றில் பல லட்சக் கணக்கான ரூபா பெறுமதிமிக்க கரண்டிகள், அகப்பைகள் மற்றும் முள்ளுக் கரண்டிகள் என்பனவும் அடங்கும் என்று தெரியவருகிறது.

## இளங்கலைஞர் மன்றத்தின் இசை விழா

வட-இலங்கை சர்வோதயத்தினரின் ஆதரவில்

### ஆறாம் நாள் நிகழ்ச்சிகள்

### 14 - 2 - 93 (ஞாயிறு) இன்று

தியாகராஜ உற்சவம்

காலை 9.00 — 9.15 மங்கள விளக்கேற்றல்

திரு. ஆ. சிவரத்தினம் (சிற்பாசாரியார்)
திரு. ம. சிவலிங்கம் (வர்த்தகர்)
தலைவர்: கே. திருநாவுக்கரசு (வட இலங்கை சர்வோதயம்)
சிறப்பு விருந்தினர்: க. கணேசமூர்த்தி (மாவட்ட முகாமையாளர், இலங்கை வங்கி)

9.30 — 11.00 மங்கள இசை

| நாதஸ்வரம்: | தவில்: |
| --- | --- |
| கே. எம். பஞ்சாபிகேசன் | கே. பழனி |
| என். கே. பத்மநாதன் | கே. ஆர். புண்ணியமூர்த்தி |
| கே. ஆர். சுந்தரமூர்த்தி | கே. நித்தியானந்தன் |
| எஸ். எஸ். சிதம்பரநாதன் | பி. உதயசங்கர் |
| வி. கே. கானமூர்த்தி | பி.ரவி, ஆர் எஸ் ரவீந்திரன் |
| வி. கே. பஞ்சமூர்த்தி | ஆர் என் சுதாகரன் |
| என். கே. கணேசன் | பி. கணேசன், ஆர் பாஸ்கரன் |
| எம். பி. நாகேந்திரன் | கே வீராச்சாமி, |
| என் கேதீஸ்வரன் | எஸ் ஜெயராமன் |
| பி. ரஜி | பி முருகதாஸ், எஸ். ராமதாஸ் |

11.00 — 12.00 பஞ்சரத்தினக் கீர்த்தனைகள்
முதுகலைஞர்களும், இளங்கலைஞர்களும் கலந்து சிறப்பிப்பார்கள்

**12.00 மதிய போசனம்**

**மாலை**

யாழ். வர்த்தக சங்கத்தின் ஆதரவில்

"தியாகராஜ கீர்த்தனாஞ்சலி"

மாலை 3.00 — 4.00 மங்கள இசை

| நாதஸ்வரம்: | தவில்: |
| --- | --- |
| கே. நாகராசா | என். கே இலேவிவரன் |
| வி. ஜெகந்நாதன் | எஸ். விஜயகுமார் |
| எம். நாராயணசாமி | எஸ். கண்ணன் |
| என். யோகநாதன் | எஸ். நடராஜசுந்தரம் |

4.00 — 4.45 பாட்டு யசோதா கந்தசாமி
வயலின்: பாக்கியலக்ஷ்மி நடராஜா
மிருதங்கம்: எஸ். குமாரராஜா

4.45 — 5.30 பாட்டு வி. பரமசாமி
வயலின்: எஸ் வெங்கடேஸ்வரசர்மா
மிருதங்கம்: எஸ். பாலச்சந்திரசர்மா

5.30 — 6.15 பாட்டு பரமேஸ்வரி கணேசன்
வயலின்: எஸ். கோபிதாஸ்
மிருதங்கம்: கே. கண்ணதாஸன்

இரவு: 6.15 — 6.30 மங்கள விளக்கேற்றல்

திரு. சு. செல்வரத்தினம், விக்கினேஸ்வரா ஸ்ரோர்ஸ் உரிமையாளர், 'ஈஸ்வர பவான்' (கிண்ணன்)
திரு த. வைத்திலிங்கம் (வர்த்தகர்)
தலைவர்: திரு. வி. சிற்சபேசன் (தலைவர் யாழ். வர்த்தகசபை)
சிறப்பு விருந்தினர் திரு க. குணராஜா (யாழ் உதவி அரசாங்க அதிபர்)

6.30 — 7.15 பாட்டு எம். ஸ்ரீரங்கநாதன்
வயலின்: எஸ். வெங்கடேஸ்வரசர்மா
மிருதங்கம்: எஸ். பாலச்சந்திரசர்மா

7.15 — 8.15 வில்லிசை
ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினர் வழங்கும்
"சத்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள்"

8.15 — 9.15 பரதநாட்டியம்
'நாட்டிய விசாரத்' விக்னேஸ்வரி-சரவணமுத்து, (கலாக்ஷேத்திரா)
ருக்மிணி நர்த்தனாலய மாணவிகளும்
நட்டுவாங்கம்: கிஷோந்தி - ரவீந்திரா
பாட்டு: சாரதா - சச்சிதானந்தம்
வயலின்: எஸ். கோபிதாஸ்
மிருதங்கம்: எஸ். மகேந்திரன்

வாழ்த்துவோர்:

### ரூபன் ஸ்ரோர்ஸ்

திருநெல்வேலி மார்க்கட், திருநெல்வேலி
(சி-5965)

| உனது 6-ம் ஆண்டு நிறைவில் | உனது 3-ம் ஆண்டு நிறைவில |
| --- | --- |

## எமது விழிகள் சிந்தும் அஞ்சலி



### மேஜர் கேடில்ஸ்

[மகாலிங்கம் திலீபன்]
தாய் மடியில்
14-05-1966
தமிழீழ மண்ணில்
14-02-1987



### மேஜர் காண்டீபன்

[மகாலிங்கம் காண்டீபன்]
தாய் மடியில்
14-06-1970
தமிழீழ மண்ணில்
07-08-1990

சினம் கண்டாய் சினம் கொண்டாய் நொடிப்பொழுதில் பகைவென்றாய்.
மனங் கொண்டாய் தமிழீழ விடுதலையின் முனைப்பானாய்
துடிதுடித்த உன்கரத்தில் துவக்கை ஏந்தி பொடிப்பொடியாய் எதிரிகளை
தவிடு பொடி ஆக்கி நின்றாய் மேஜர் கேடில்ஸ் உன் புகழின் பெருமைதனை
சொல்கின்ற இதழ்களெல்லாம் இனிப்பெடுக்கும் நெஞ்சினிலே வீரம்பாய்ச்சும்
சிங்களத்தின் படைகளுக்கோ குலைநடுங்கி காய்ச்சல் ஆக்கும்
உன் தம்பி காண்டீபனும் உன்வழியினில் வீறுநடைபோட்டான்
நீங்கள் இருவருமே பாசமுறும் வாடாத மல்லிகையாய் எம் இதய அறையினிலே வாழ்வீர்கள்

--குடும்பத்தினர்

காண்டி வாசா,
கண்டாவளை. (4271)

### சிந்தனைக்கு

நாமார்க்கும் குடிஅல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணி அறியோம் பணிவோம்
அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை,
— திருநாவுக்கரசர்.

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 14 - 02 - 1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண் - 05

# கிழக்கில் ராணுவம் தமிழரை சட்ட விரோதமாக கொன்றது

## -சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை

(கொழும்பு)
இலங்கையில் 1992ம் ஆண்டில் ஆட்கள் காணாமல் போகும் சம்பவங்களும் சட்டத்துக்குப் புறம்பான வகையில் மரணதண்டனை நிறைவேற்றப்படுதலும் கிழக்குமாகாணத்தில் அதிக அளவில் இடம் பெற்றிருப்பதாக சர்வதேச மன்னிப்பு சபை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கொக்கட்டிச் சோலையில் இடம்பெற்ற படுகொலைச்சம்பவம் ஒன்றிற்கு மட்டுமே அரசாங்கம் விசாரணைக் கமிஷன் அமைக்க முன்வந்தது சிவிலியன் நீதிமன்றத்தின் மூலமாக அல்லாமல் இராணுவ நீதிமன்றம் இதற்கான நீதி விசாரணைகளை மேற்கொண்டுகுற்றம் சாட்டப்பட்ட இருபது இராணுவத்தினரில் பத்தொன்பது பேரைவிடுதலை செய்தது.

காணாமல் போவது மற்றும் சித்திரவதைக்கு உள்ளாவது ஆகியவற்றிலிருந்து கைதிகளைப் பாதுகாப்பதாக அரச வாக்குறுதி அளித்த போதும் அவை செயற்படுத்தப் படவில்லை. பகிரங்கமாக பிறப்பிக்கப்பட்ட இராணுவ உத்தரவுகள் கூட கடைப்பிடிக்கப்பட்டதாக இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அம்பாறை மாவட்டத்தில் சகஜ நிலை தோற்றவில்லை

### கனேடியத் தூதுவர்

(கொழும்பு)
அம்பாறை மாவட்டத்தில் வாழும் மக்கள் மத்தியில் முழுமையான சகஜ நிலைமை ஏற்பட்டிருப்பதாக சொல்வதற்கு இல்லை ஒரு சமூகம் மற்றைய சமூகத்திற்குபயந்து வாழும் நிலையைத்தான் காணமுடிகிறது என்று இப்பகுதிக்கு விஜயம் செய்த கனேடியத் தூதுவர் பென்னா ஜே பிளன்ஸ் தெரிவித்தார்.

அங்கு கனடிய அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் பல அபிவிருத்தித் திட்டங்களையும் பார்வையிட்டார். பின்னர் பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றும் போது அபிவிருத்தி ஏற்பட வேண்டுமானால் சகல இன மக்கள் மத்தியிலும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும், புரிந்துணர்வும் அவசியம் எனவும் தெரிவித்தார்.

## வடபகுதி வாலிபர் கொழும்பில் குத்திக் கொலை

(கொழும்பு)
வடபகுதியைச் சேர்ந்த வாலிபர் ஒருவர் கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் குத்திக் கொல்லப்பட்டார்.

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த கந்தையா சண்முகநாதன் [33] என்ற இந்த இளைஞர் குத்துக் காயங்களுடன் பேராதிராஜ மாவத்தையில் விழுந்திருந்தார். பின் இவர் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதும் இறந்தார் இவர் கொழும்பில் கடைபொன்றில் வேலை செய்யும் ஊழியராவார்.

## மட்டக்களப்பு

## இறந்த பல்கலைக்சழக மாற்றம் மாணவர்கள் பெருமபாதிப்பு

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்டத்தில் இறந்த வெளிப் பல்கலைக்கழகம் ஒன்று இல்லாமையாலும், மட்டக்களப்பு பத்திய பிரதேச நிலையம் மாற்றப்பட்டு கற்கை நிலையமாக மட்டும் இயங்கி வருவதாலும் அங்குள்ள பெரும்பாலான மாணவர்கள் தமது கல்வியைத் தொடரமுடியாமல் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

1982-ம் ஆண்டு மட்டக்களப்பில் ஆரம்பிக்கப் பட்ட மத்திய பிரதேச நிலையம் 1984-ம் ஆண்டு அம்பாறைக்கு மாற்றப்பட்டதால் இப்போது ஒரு கற்கை நிலையமாகவே மட்டக்களப்பு நிலையம் இயங்கி வருகின்றது. இதற்கென போதிய இடவசதி செய்து கொடுக்கப்படாது கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான ஓர் அறையிலேயே இயங்கிவருகிறது.

இங்குள்ள பல தொண்டர் நிறுவனங்கள் கட்டடம் அமைத்துக் கொடுக்க முன்வந்த போதிலும் போதிய இடவசதி இல்லாத குறையால் இங்குள்ள அதிகாரிகள்எவரும் முன்வரவில்லை.

## பலவத்தை முகாமிலிருந்து ஆறு ஜே. வி.பியினர் தப்பினர்

[கொழும்பு]
பலவத்தை தடுப்பு முகாமிலிருந்து ஜே. வி. பி. கிளர்ச்சி சந்தேக நபர்கள் ஆறுபேர் கடந்த சில தினங்களில் தப்பிச் சென்றிருப்பதாக கூறப்படுகின்றது.

இந்த ஆறுபேரில் நான்கு பேர் அதி தீவிரவாதிகள் எனவும், இந்த ஆறுபேரையும் கைது செய்யவிசேட பொலிஸ் கோஷ்டிஈடுபடுத்தப் பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

## வலி தென்மேற்கு பகுதியில் அறுவடை வீழ்ச்சி

[மானிப்பாய்]
வலிதென்மேற்கு பகுதிகளை உள்ளடக்கிய விவசாய காணிகளில் இவ்வருடத்திற்கான அறுவடை கணிசமான அளவில் வீழ்ச்சியடைந்துள்ளது கடந்த வருடத்தில், ஏற்பட்ட அறுவடையிலும்பார்க்க இவ்வருடத்திற்கான நெல் அறுவடை ஐம்பது வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.முன்னர் நெல் வயற்காணிகளில் ஒரு பரப்புக்கு குறைந்தது இரண்டு பறை நெல்லு விளையும காணிகளில் இவ்வருடம் அறுவடை பரப்புக்கு ஒரு பறையிலும் குறை

## தராதரப் பத்திரம்

மாஸ்ராசிரியர்சங்கம் நடாத்திய 1992ஆம் ஆண்டில் முதலாவது பயிற்சி வகுப்பில்

## ஆலயக் குடமுழுக்கு ஓர் அரசியல் பம்மாத்து

சுமார் நான்கு வருடங்களாக மூடிக்கிடந்த திருக்கோணேஸ்வரர் ஆலயம் கடந்த பதினோராம் திகதி திறக்கப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. இதற்கு அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள தொலைத்தொடர்பு சாதனங்களிலும், மக்கள் தொடர்பு சாதனங்களிலும் அளிக்கப்பட்ட முக்கியத்துவம் மிகப்பெரியது. பத்திரிகைகள் விசேடஅநுபந்தங்களை வெளியிட்டன. வானொலி. தொலைக்காட்சி முக்கியத்துவம் கொடுத்து செய்திகள் வெளியிட்டன.

இவற்றில், சிறிலங்கா ஜனாதிபதியின் மதபேதமற்ற கொள்கையும், பெருந்தன்மையும் பற்றி பெரிதாக பிரஸ்தாபிக்கவும்பட்டிருந்தன. இந்து கலாசார இராஜாங்க அமைச்சர் தேவராஜ் ஜனாதிபதியின் கவனத்திற்கு இக் கோவில் விவகாரத்தைக் கொண்டுவந்தவுடன் ஜனாதிபதி கவலையுற்று, வேதனையடைந்து கோவிலை உடனடியாகத் திறப்பதற்கு பணிப்புரை வழங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இலங்கையில் எத்தனை இந்துக் கோவில்கள், தேவாலயங்கள் இடிக்கப்பட்டன. எத்தனை விக்கிரகங்கள் தூக்கி வீசப்பட்டன. எத்தனை அர்ச்சகர்கள், குருமார்கள் கொல்லப்பட்டனர். எத்தனை ஆலயங்களில் இராணுவம் நிலைகொண்டுள்ளது. எத்தனை ஆலயங்களில் பூசைகள் நடைபெறாமல் உள்ளன. இவை யாவற்றிற்கும் யார் பொறுப்பு? இவையாவும் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவிற்குத் தெரியாதா? இது தொடர்பாக சிறிலங்கா ஜனாதிபதிக்குச் செய்யப்பட்ட முறைப்பாடுகள் எங்கே போய்விட்டன?

சிங்கள பௌத்த பேரினவாதத்தின் ஏனைய மதங்கள் ரீதியான கொள்கைகள், கோட்பாடுகள் இந்துக்களுக்கோ அன்றி இலங்கையில் உள்ள பௌத்தர் அல்லாத ஏனையவருக்கோ தெரியாததல்ல. இந்து ஆலயம் ஒன்றில் வணங்குவதனாலோ, அன்றி கொழும்பிலுள்ள சில அர்ச்சகர்களை ஆதரிப்பது போல் காட்டிக்கொள்வதினாலோ அரசாங்கம் இந்துக்கள் மீதும், பௌத்தர் அல்லாத ஏனைய மதத்தினரையும் சமனாக மதிக்கின்றதென்றோ, ஏனைய மதங்களுக்கும் சம அந்தஸ்து

## நாவற்குழியில் நாயகரானவர்!

பொத்தி வைத்த எங்களின்
முத்துக்கள்...
நித்தம் நித்தம் பூத்திருந்த
முல்லைகள்...
சொத்தாய் நாம் நினைத்திருந்த
செரிக்கங்கள் ...
சத்தும் கடல் சுமந்துவந்த
சங்குகள்...
வித்தாய் மண்ணில் ஊன்றிவிட்ட
ஆலைகள் ...
புத்தம் புது மணம்பரப்பும்
சோலைகள்...
மத்தாய் ஒன்று சேர்ந்துசென்ற
காளைகள்...
தத்தித் தவழும் வான்முகட்டின்
நிலவுகள்...
கத்தி இசை பரப்புகின்ற
குயில்கள்...
இவர்கள்...
காலம் முழுதும் நாம்வணங்கும்...
கோயில்கள்...

— கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன்

## முதுகில் குத்துவதைவிட நேரடியாக எதிர்க்கலாம்

### - ஜெயலலிதா தெரிவிப்பு

தோழமை என்று கூறிக் கொண்டு முதுகில் குத்துபவர்களை விட துணிவோடு நேரடியாகவே எதிர்ப்பவர்களைப் பெரிதும் மதிப்பதாக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கூறியிருக்கிறார்.

சட்டப் பேரவையில் நேற்று ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும்தீர்மானத்தின் மீதான விவாதத்திற்குப் பதிலளிக்கையில் ஜெயலலிதா இவ்வாறு குறிப்பிட்டார்.

அண்மையில் கன்னியாகுமரியிலிருந்துசென்னைவரை பாதயாத்திரை நடாத்தியபேரவை உறுப்பினர் ஒருவர், தனது யாத்திரை சென்னையை அடைவதற்கு முன் செல்வி ஜெயலலிதாவின் ஆட்சி பதவியிலிருக்காது என்று பேசியதாகவும், அதே உறுப்பினர் சட்டப் பேரவையில் பேசுகையில், தோழமை உணர்வுடன் பேசுவதாகவும் சில்குறைகளை மாத்திரம் சுட்டிக்காட்டுவதாகவும் கூறியது வேடிக்கையாக இருக்கிறது என்று செல்வி ஜெயலலிதா குறிப்பிட்டார்.

ஆனால் பொது மக்கள் இந்த நடவடிக்கைகளைவேடிக்கையாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள் என்றும் அவர் வலியுறுத்திப் பேசினார்.

இந்திரா காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் சட்டப் பேரவையில் இல்லாத நிலையில் செல்வி ஜெயலலிதாவின் இந்தப் பேச்சை ஆளும் கட்சி உறுப்பினர்களும், சில எதிர்க்கட்சி உறுப்பினர்களும் மேசையில் தட்டி வரவேற்றார்கள் எனத்தெரிவிக்கப்படுகிறது.

உலக

கத்திலே தமிழீழ கல்விக்கழகம் ஒன்றை அமைத்து கல்விக்காக - கல்வி வளர்ச்சிக்காக அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு தலைவர் பிரபாகரன் பணித்துள்ளார்.

தலைவரின் எண்ண ஓட்டத்திற்கு ஏற்பவே நாம் கலை பண்பாட்டுத் துறையிலே, கல்வித்துறையிலே இன்னும் பல்வேறு துறையிலே மேம்பாட்டுக்கான பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

எமது கல்விநிலையை சிதைத்து பாழ்படுத்துவதற்காகவே சிறிலங்கா அரசு முனைகின்றது. இந்த வேளையிலே எமது மாணவர்களின் கல்வியை நாமே மேம்படுத்த வேண்டும் என்ற வகையிலேதான் சிறிலங்கா அரசின் க. பொ. த. சாதாரண தரத்துக்கு நிகராக அதைவிட சிறந்த தரத்தைக் கொண்டதாக தமிழீழ பொதுக் கல்வித் தேர்வை நாம் வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளோம் என்றார்.

## பயணிகள்

பெற்ற படகுப் போக்குவரத்தினால் தென்பகுதியிலிருந்து வந்து தங்கியிருந்தவர்கள் கிளாலி மார்க்கமாக யாழ். வந்து சேர்ந்தனர். [தி]

## பூநகரியில்

முதல் 6-00 மணிவரை விடுதலைப் புலிகளுடன் மேற்படி விடயம் குறித்து பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டது. இப்பேச்சுக்களில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தைச்சேர்ந்த ஜெனிவாப் பிரதிநிதி திரு மியூடர் மற்றும்

துக் கோவில்கள், தேவாலயங்கள் இடிக்கப்பட்டன. எத்தனை விக்கிரகங்கள் தூக்கி வீசப்பட்டன. எத்தனை அர்ச்சகர்கள், குருமார்கள் கொல்லப்பட்டனர். எத்தனை ஆலயங்களில் இராணுவம் நிலைகொண்டுள்ளது. எத்தனை ஆலயங்களில் பூசைகள் நடைபெறாமல் உள்ளன. இவை யாவற்றிற்கும் யார் பொறுப்பு? இவையாவும் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவிற்குத் தெரியாதா? இது தொடர்பாக சிறிலங்கா ஜனாதிபதிக்குச் செய்யப்பட்ட முறைப்பாடுகள் எங்கே போய்விட்டன?

சிங்கள பௌத்த பேரினவாதத்தின் ஏனைய மதங்கள் ரீதியான கொள்கைகள், கோட்பாடுகள் இந்துக்களுக்கோ அன்றி இலங்கையில் உள்ள பௌத்தர் அல்லாத ஏனையவருக்கோ தெரியாததல்ல. இந்து ஆலயம் ஒன்றில் வணங்குவதனாலோ, அன்றி கொழும்பிலுள்ள சில அர்ச்சகர்களை ஆதரிப்பது போல் காட்டிக்கொள்வதினாலோ அரசாங்கம் இந்துக்கள் மீதும், பௌத்தர் அல்லாத ஏனைய மதத்தினரையும் சமனாக மதிக்கின்றதென்றோ, ஏனைய மதங்களுக்கும் சம அந்தஸ்து வழங்குகின்றதென்றோ அர்த்தப்படாது. இதனை அண்மையில், மாவிட்டபுரம் ஆதீனகர்த்தா து. சண்முகநாதக் குருக்களும் குறிப்பிட்டிருந்தார். இந்நிலையில், கோணேஸ்வர ஆலயத்தைத் திறப்பதென்பதோ அன்றி கும்பாபிஷேகமும், குடமுழுக்கும் செய்வதினாலோ பௌத்த அரசாங்கம் ஏனைய மதங்களையும் சமனாகக் கருதுகின்றது என்பது பொருளல்ல. உண்மையில் கோணேசர் ஆலயம் திறக்கப்பட்டதும், கும்பாபிஷேகம் நடத்தப்பட்டதும் ஓர் அரசியல் பம்மாத்தேயாகும்.

நாம் கூறுவதுபோல் இல்லையேல் திருக்கோணேசர் ஆலயத்தை இந்து சமயத்தின் மீது உள்ள பற்றினாலும் சகல மதங்களையும் ஒன்றாகவே கருதும் உயர்ந்த மனோ பக்குவத்தின் அடிப்படையிலும் சிறிலங்கா ஜனாதிபதி திறக்க அனுமதித்திருப்பாரேயானால், ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்களை வாசலில் வைத்து இராணுவத்தினர் கடும் சோதனைக்கு உள்ளாக்குவது ஏன? பக்தர்கள், அர்ச்சகர்கள் கொண்டு செல்லும் பூசைத் திரவியங்கள் மீது கடும் சோதனை மேற்கொள்வதும் சிலவற்றிற்கு தடை விதிப்பதும் ஏன்? வாகனத்தில் முன்னறிவித்தலின்றி செல்லத்தடைவிதித்திருப்பதும் ஏன்? ஆலயச் சுற்றாடலில் பெருமளவு படையினர் குவித்து வைக்கப்பட்டிருப்பதும் ஏன்? ஆலயத்தில் நேர காலப் பூசைகள் நடத்த முடியாமல் கோட்டைக் கதவுகளை மூடுவதும், ஆலயக் குருமாரை ஆலயத்தில் தங்கியிருக்க அனுமதிக்காததும் ஏன்? திருமலை நகரம் தனது இராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டில் உள்ளதாகக் கூறிக்கொள்ளும் சிறிலங்கா அரசாங்கம் இவ்வாறான கெடுபிடிகளை ஏன் வைத்துள்ளது.

இந்நிலையில் சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்ளும் கோணேசர்ஆலயம் திறந்து வைத்தல்போன்ற மதத்தை அரசியலாக்கும் பிரேமதாசாவின் நடவடிக்கைகள் இந்துக்களினதும், பௌத்தர் அல்லாத ஏனைய மதத்தவர்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகளையும், பௌத்த பேரினவாதகள் ஏனைய மதங்களுக்கும் இழைத்த கொடுமைகளையும், அழிவுகளையும் நிவர்த்தி செய்துவிடவோ, மறைத்துவிடவோ போவதில்லைபல நூற்றுக்கணக்கான இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டும், சிதைக்கப்பட்டும் உள்ள வேளைகளில் கோணேசர்ஆலயத்தைத் திறப்பது அரசியல் பம்மாத்தே ஒழிய இந்து சமயத்திற்கு வழங்கிய சம உரிமையோ அன்றி சம அந்தஸ்தினாலோ அல்ல.

மாக மட்டும் இயங்கி வருவதாலும் அங்குள்ள பெரும்பாலான மாணவர்கள் தமது கல்வியைத் தொடரமுடியாமல் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

1982-ம் ஆண்டு மட்டக்களப்பில் ஆரம்பிக்கப் பட்ட மத்திய பிரதேச நிலையம் 1984-ம் ஆண்டு அம்பாறைக்கு மாற்றப்பட்டதால் இப்போது ஒரு கற்கை நிலையமாகவே மட்டக்களப்பு நிலையம் இயங்கி வருகின்றது. இதற்கென போதிய இடவசதி செய்து கொடுக்கப்படாது கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான ஓர் அறையிலேயே இயங்கிவருகிறது.

இங்குள்ள பல தொண்டர் நிறுவனங்கள் கட்டடம் அமைத்துக் கொடுக்க முன்வந்த போதிலும் போதிய இடவசதி இல்லாத குறையால் இது தடைப்பட்டுள்ளது. இது குறித்து நடவடிக்கை எடுக்க

## இந்தியஅரசின்மீதான கண்டனக் கூட்டம்

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயண கிராம அபிவிருத்திச் சங்கம் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகத்தினரால் 14-02-93 மாலை 7 மணிக்கு நிலையமுன்றலில் வேணுகிட்டுவின் மறைவு குறித்து கண்டனக் கூட்டமும், திரை நீக்கமும் நடைபெறும் இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களும் சொற்பொழிவாற்றுவார்கள்.

[கொழும்பு]

பலவற்றை தடுப்பு முகாமிலிருந்து ஜே. வி. பி. கிளர்ச்சி சந்தேக நபர்கள் ஆறுபேர் கடந்த சில தினங்களில் தப்பிச் சென்றிருப்பதாக கூறப்படுகின்றது.

இந்த ஆறு பேரில் நால்வர் அதி தீவிரவாதிகள் எனவும். இன்று நபேரையும் கைது செய்யவிசேட பொலிஸ் கோஷ்டி ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

# வலி தென்மேற்கு பகுதியில் அறுவடை வீழ்ச்சி

[மானிப்பாய்]

வலிதென்மேற்கு பகுதியினை உள்ளடக்கிய விவசாய காணிகளில் இவ்வருடத்திற்கான அறுவடை கணிசமான அளவில் வீழ்ச்சியடைந்துள்ளது கடந்த வருடத்தில். ஏற்பட்ட அறுவடையிலும்பார்க்க இவ்வருடத்திற்கான நெல் அறுவடை ஐம்பது வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.முன்னர் நெல் வயற்காணிகளில் ஒரு பரப்புக்கு குறைந்தது இரண்டு பறை நெல்லு விளையும காணிகளில் இவ்வருடம் அறுவடை பரப்புக்கு ஒரு மறையிலும் குறைவாகவே பெறபபட்டு வருகின்றது. இவ்வாறான வீழ்ச்சிக்கு பிரதான காரணம் கடந்த ஆறு ஏழு வருடங்களாக மழை வீழச்சி குறைவடைந்து வருகின்றமையே ஆகும்.

இவ்வறுவடை வீழ்ச்சியின் காரணமாக எதிர்வரும் காலங்களில் பிறமாவட்டங்களிலிருந்து அதிகளவு நெல்லை கொள்வனவு செய்ய வேண்டிய அவலநிலை உருவாகக் கூடுமென நவாலிப்பகுதியின் பிரதான நெற்பயிர்ச் செய்கையாளர்கள் கருத்துக் கூறியுள்ளனர்.

## தராதரப் பத்திரம்

பாலராசிரியர்சங்கம் நடாத்திய 1992ஆம் ஆண்டில் முதலாவது பயிற்சி வகுப்பில் சேர்ந்து. பரீட்சையும் எழுதி சித்தியடைந்து பாலராசிரியர் தராதரப்பத்திரம் பெறுவோர் பின்வருமாறு:-

செல்வி ஜெபமாலா மை [யாழ்ப்பாணம்]. செல்வி வாகினி .செ [அரியாலை]. செல்விகமநனினி கு.(மானிப்பாய்), செல்வி சியாமினி சி [உரும்பராய்]. செல்வி இன்பரதி .செ [அரியாலை], செல்வி பேரின்பநாயகி நா [இணுவில்]. செல்விபுஷ்பலீலா மு [இணுவில்] செல்வி உஷா மினி [illegible] [உரும்பராய்], செல்வி சித்திரா .ஜெ [யாழ்ப்பாணம்].

தாகவும், அந்த உறுப்பினர் சட்டசபையில் பேசுகையில், தோழமை உணர்வுடன் பேசுவதாகவும் சிறுகுறைகளை மாத்திரம் சுட்டிக்காட்டுவதாகவும் கூறியது வேடிக்கையாக இருக்கிறது என்று செல்வி ஜெயலலிதா குறிப்பிட்டார்.

ஆனால் பொது மக்கள் இந்த நடவடிக்கைகளைவேடிக்கையாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள் என்றும் அவர் வலியுறுத்திப் பேசினார்.

இந்திரா காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் சட்டப் பேரவையில் இல்லாத நிலையில் செல்வி ஜெயலலிதாவின் இந்

### பயணிகள்

பெற்ற படகுப் போக்குவரத்தினால் தென்பகுதியிலிருந்து வந்து தங்கியிருந்தவர்கள் இளவாலை மார்க்கமாக யாழ். வந்து சேர்ந்தனர். [தி]

### கல்வி

விளக்கி அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்;

இந்தக் கல்வி எமது தேசியக் கட்டமைப்புக்கு ஆணி வேர் போன்றது. அடிப்படையானது சிங்களப் பேரினவாதம் நீண்ட காலமாகவே தமிழினத்தின் கல்வியை அழித்து விட முயற்சிசெய்து வந்துள்ளது. ஏன் இப்படி தமிழரின் கல்வியை அழிக்கவேண்டும்? கல்வி ஓர் இனத்தின் கட்டமைப்புக்கு ஒரு தூண் போன்றது. அடிப்படையானது.இந்த அடிப்படையை உடைத்துவிட்டால் அந்த தேசிய இனம் சிதைந்துவிடும். ஆகவே கல்வியை அழிக்கவேண்டும். இந்த நோக்கில நீண்ட காலமாகவே மாறி மாறி பதவிக்கு வந்த சிறிலங்கா அரசுகள் திட்டமிட்டு எமது மக்களின் கல்வியை சீரழித்து வந்தவரலாறு உங்களுக்குத்தெரியும்.

தமிழின அழிப்பின் முக்கிய அம்சமாக இந்தக் கல்வி அழிப்புக்கொள்கை அமுல் நடத்தப்பட்டு வந்தது. கல்வியும், மொழியும், பண்பாடும் தேசிய இனத்தை, தேசிய கட்டமைப்பைக் கட்டிக்காக்கும் தூண்கள் என்று தலைவர் சொல்கின்றார். இந்தத் தூண்களை அழித்துவிடவே எதிரி எண்ணுகிறான். தமிழினத்தின் தனித்துவத்தைஅழிப்பதுதான் அவனின் நோக்கம். ஆகவே இதை நாங்கள் கட்டிக் காக்க வேண்டும். எங்கள் தாயகத்திற்காக போராடுவோம். அதே போன்று எங்களின் இனத்தின் ஜீவாதாரமாக விளங்கும் கல்விக்காகவும் நம் போராட வேண்டும் அதைக் கட்டிக் காக்க வேண்டும், அதை வளர்க்க வேண்டும். அதை மேம்படுத்த வேண்டும். இது தான் விடுதலைப் புலிகளின் கொள்கை. இதுதான் தலைவரின் இந்தஅறிக்கையில் ஆணித்தரமாக வலியுறுத்தப்பட்டுள்ளது என்றார்.

த்து பாழ்படுத்துவதற்காகவே சிறிலங்கா அரசு முனைகின்றது. இந்த வேளையிலே எமது மாணவர்களின் கல்வியை நாமே மேம்படுத்த வேண்டும் என்ற வகையிலேதான் சிறிலங்கா அரசின் க. பொ. த. சாதாரண தரத்துக்கு நிகராக அதைவிட சிறந்த தரத்தைக் கொண்டதாக தமிழீழ பொதுக் கல்வித் தேர்வை நாம் வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளோம் என்றார்.

### பூநகரியில்

முதல் 6-00 மணிவரை விடுதலைப் புலிகளுடன் மேற்படி விடயம் குறித்து பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டது. இப்பேச்சுக்களில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தைச்சேர்ந்த ஜெனீவாப் பிரதிநிதி திரு மியூடர் மற்றும் மேற்படி அலுவலகத்தின் யாழ் வதிவிடப் பிரதிநிதி திரு. அசோக்குமார் ஆகியோரும் விடுதலைப்புலிகள் தரப்பில் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கேரதீவு- சங்குப்பிட்டிப் பாதையை பொதுமக்களின் போக்குவரத்துக்கு திறந்து விடுவதற்காக மேற்படி பகுதியில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினரை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று விடுதலைப் புலிகள் கடந்த தடவை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களின் போது தெரிவித்திருந்தமை தெரிந்ததே. இதுகுறித்துஅகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் அரச அதிகாரிகளிடம் எடுத்துக் கூறிய போதிலும் இராணுவத்தினரை மேற்படி பகுதிகளில் தொடர்ந்தும் நிறுத்திவைத்திருப்பதில் சிறிலங்கா அரசு உறுதியாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

### தமிழீழ

வருவதுண்டு. பரீட்சைக்காகவும், பரீட்சைப் பெறுபேறுகளுக்காகவும் நாம் நீண்ட காலம் காத்திருப்பதுண்டு. இவ்வாறான காலதாமதங்கள் தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வு மூலம் தவிர்க்கப்பட்டுள்ளது. அத்துடன் எமது கல்வித் தரம் உயர்வதற்கும் இவ்வாறான தேர்வுகள் வழிகாட்டுகின்றன என்றார். [ச.பா]

### மன்னாரில்

தெரிவிக்கையில் தற்போதைக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கு நோக்கம் எதுவும் இல்லை என்றார்.

சி ஐ ஏ. தலைமைக் காரியாலயம் முன்பாக நடந்த

# துப்பாக்கிச்சூட்டுச்சம்பவம்தொடர்பாக பாகிஸ்தானியர் மீது சந்தேகம்

(வாஷிங்டன்)

அமெரிக்க மத்திய புலனாய்வு ஏஜென்சியான சி ஐ ஏயின் தலைமையகத்திற்கு வெளியே இரு ஊழியர்களைச் சுட்டுக்கொன்ற சம்பவம் தொடர்பாக பாகிஸ்தானியரான மீர் ஐமால் கன்சி என்பவர் அமெரிக்காவினால் சந்தேகிக்கப்படுகின்றார். இவர் தற்போது அமெரிக்காவை விட்டு வெளியேறியிருக்கலாம் எனவும் எப். பி. ஐயின் உளவு ஸ்தாபன அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இந்த அதிகாரி தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டி அளிக்கையில், மேலும் 28 வயதான கன்சியின் ரெஸ்டன் வீட்டைச் சோதனையிட்ட போது இரு துப்பாக்கிகளும், 550 தடவை சுடக்கூடிய ரவைகளும், குண்டு துளைக்காத மார்புக்கவசமும், இராணுவ வரைபினும் கண்டெடுக்கப்பட்டதாக தெரிவித்தார்.

சி. ஐ ஏயின் தலைமைக் காரியாலயம் முன்பாக நடத்தப்பட்ட இக் கொலை சி ஐ ஏ ஊழியர்களுக்கு இடையே பெரும் அதிர்ச்சி ஏற்படுத்தியிருப்பதாகவும், இக் கொலைக்கான காரணம் என்ன என்பதுபற்றிதெரியவரவில்லை எனவும் கூறப்படுகின்றது இச் சம்பவம் சி ஐ ஏ. எதிர்ப்பு சதியாக இருக்கலாம் எனவும் கூறப்படுகிறது.

# ஜெயலலிதா விரைவில் ஹைதராபாத் ஓடுவார்

– சுவாமி தெரிவிப்பு

[சென்னை]

ஜெயலலிதா கொடூர உள்ளம் படைத்தவர். மனநிலை சரியில்லாதவர். இப்படிப்பட்ட ஒருவருக்கு பிரதமர் நரசிம்மராவ் ஆதரவு தருவது வேதனையாக இருக்கின்றது என்று டாக்டர் சுப்பிரமணிய சுவாமி தெரிவித்தார். ஜனதாக் கட்சித் தலைவரும், தமிழக நல்லாட்சி இயக்கத் தலைவருமான டாக்டர் சுவாமி சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில், மேலும் ஜெயலலிதா ஆடிப்போயிருக்கிறார். விரைவில் ஹைதராபாத் ஓடப்போகின்றார்.சற்று காலதாமதமானாலும் அவர் ஓடப்போவது மட்டும் உறுதி என்றும் தெரிவித்தார்.

ஈழநாதம்

# சொந்தக் காலில் நிற்க தொழிற் கல்வி அவசியம்

– துணைவேந்தர்

எமது பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த உற்பத்தியைப் பெருக்கி எமது பொருளாதாரத்தை வளர்க்க வேண்டுமென்றால் எங்களுக்குரிய வளங்களை அபிவிருத்தி செய்தல் அவசியம். மூலவளங்களை வளர்க்க வேண்டுமென்றால் கல்வி அவசியம். இவ்வாறு நேற்று கல்வி மேம்பாட்டுக்கழகத்தினரின் பரிசளிப்பு விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் கி. துரைராஜா அவர்கள் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் முதலாம் ஆண்டில் கல்வி கற்போரில் 2 வீதத்தினரே பல்கலைக் கழகக் கல்வியை பெறுகிறார்கள். இலங்கையில் 45 லட்சம் பேர் கல்வி கற்கின்ற போதிலும் வருடத்தில் 9ஆயிரம் பேரே பல்கலைக்கழகத்துக்குச் செல்கிறார்கள். எனவே நாங்கள் தொழிற் கல்வியையும் கற்க வேண்டும். ஒவ்வொருவரும் தமது சொந்தக்காலில் நிற்பதற்குதொழில் நுட்பக்கல்வி அவசியம் என்றார். [சிபா]

# 7 தமிழ் வாலிபர் கைது

[கொழும்பு]

கொழும்பு வெள்ளவத்தையில் ஏழு தமிழ் இளைஞர்கள் சென்ற 9ஆம் திகதி இரவு கைதுசெய்யப்பட்டுள்ளனர்

இவர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் என்றும், இவர்களிடம் பம்பலபிட்டி, வெள்ளவத்தை தெகிவளை பகுதிகளில் குடியிருக்கும் பல தமிழர்களின் விலாசங்கள் இருந்ததாக வெள்ளவத்தை பொலிஸ் பொறுப்பதிகாரி சிறில் த சில்வா தெரிவித்துள்ளார்.

# ராவின் தூதுவர் -ஜெயலலிதா சந்திப்பு நடக்கவில்லை

[சென்னை]

இந்திரா காங்கிரஸ் தலைவர் பி. வி. நரசிம்மராவின் சிறப்புத் தூதர்களாக தமிழகம் வந்திருந்த மோதிலால் வோராவும், கே. வி. தங்கபாலுவும் அனைத்து இந்திய அண்ணா தி மு க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவுட்பட அந்தக் கட்சியைச் சேர்ந்த எந்தத் தலைவரையும் சந்திக்கவில்லை

அவர்கள் சென்னையிலிருந்த போது அனைத்து இந்திய அண்ணா தி.மு.க -காங்கிரஸ் கூட்டணி உட்படப் பல்வேறு பிரச்சினைகள் குறித்து சட்டமன்றக் காங்கிரஸ் உறுப்பினருடனும், தலைவர்களுடனும் விரிவாக ஆலோசனை நடத்தினார்கள்.

நேற்றுக்காலை அவர்கள் டில்லி திரும்பினார்கள்.

## போராட்டம்

வுகளைத் துறந்து, தமது மண்ணையும் மக்களையும் நேசிக்கும் விடுதலைப் பற்றாளர்கள் எம்முடன் இணைகிறார்கள். இந்தப் போராளிகளின் இலட்சிய வாழ்க்கையையும், அர்ப்பணிப்பையும் நாம் போற்ற வேண்டும். கௌரவிக்கவேண்டும்.

தாயக விடுதலைக்கு தம்மை அர்ப்பணிக்கும் தெளிவிற்கும், கல்விக்கும் உரிமைக்கும் இடையில் நாம் என்றுமே முரண்பாட்டைக் கற்பிக்க முயலவில்லை. இரண்டுமே எமது சமூகத்தின் வாழ்வியக்கத்திற்கு இன்றியமையாதவை. போரும் கல்வியும் இணைந்த ஒரு வாழ்வு இன்று எமதுவரலாற்றுத தேவையாக உள்ளது. எமது போராட்டம் கல்விக்கு கவசமாக இருப்பதுபோல கல்வியும் எமது போராட்டத்திற்கு காப்பரணாக நிற்க வேண்டும். எமது விடுதலைப் போராட்டத்தின் உன்னதத்தை உணர்ந்து கொள்ளும் வகையில் மாணவ சமூகத்திற்கு விழிப்புணர்வை ஊட்டுவது எமது கல்விமான்களின் தேசிய கடமைப்பாடாகும்.


முல்லை - மணலாறு மாவட்டம்,
கடற்றொழிற் சிறப்பிதழ்களிற்கான
**ஆக்கங்கள் கோரல்**

ஆதாரம் இருமாத வெளியீட்டின் 11-ம், 12-ம் இதழ்கள் முறையே முல்லை - மணலாறு மாவட்டம், கடற்றொழிற் சிறப்பிதழ்களாக வெளிவர உள்ளன.

இச் சிறப்பிதழ்களிற்கு எமது சுயசார்புப் பொருளாதாரத்தை வெளிப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்பான கட்டுரைகள், பேட்டிகள், படங்கள் போன்ற ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

ஆக்கங்கள் 3 பக்கங்களிற்கு மேற்படாமல் தாளின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதப்பட்டு ஆதாரம், முதன்மைச் செயலகம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம், தாவடி எனும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டுக் கழகம்.

(சி 6010)



பேராதனைப் பல்கலைக்கழக
(வெளிவாரி) விரிவுரைகள்

**கல்வியாண்டு 1993 / 94**

பின்வரும் பட்டப்பாட நெறிகளுக்கான விரிவுரைகளுக்கு பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:

- கலைமாணி B. A.
- விஞ்ஞானமாணி B. Sc. புள்ளிவிபரவியல்

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பத்தையும்விபரத்திரட்டினையும் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி 29 2. 1993

விபரங்களுக்கு
உதவிப்பதிவாளர்
பட்டப் படிப்புகள் கல்லூரி
148/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

மு கு: கடந்த15 ஆண்டுகளாக வெளிவாரிப் பட்டப்படிப்புகளுக்கென தனித்துவமாக இயங்கும் ஒரேயொரு நிறுவனம் யாழ் நகரில் இதுவே. (சி-6011)


# தேசிய நலனைப் பேண கல்வி சீரமைக்கப்பட வேண்டும்

எமது இயக்கம் விடுதலைப் போரை முன்னெடுத்துவரும் அதேவேளை கல்வித் துறையின் மேம்பாட்டிற்காக ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதற்கான அமைப்புக்களையும் கட்டியெழுப்பி வருகிறது.

எமது தேசிய வாழ்வையும் வளத்தையும் மேம்படுத்தும் இலக்கில் எமது கல்வித்துறை சீரமைக்கப்படவேண்டும். காலனித்துவகாலத்தின் தேவைகளைப் பூர்த்திசெய்யவும் சிங்களப்பேரினவாதத்தின் மேலாதிக்கத்தை திணிக்கவும் உருவாக்கப்பட்ட கல்வியமைப்பு மாற்றப்பட வேண்டும். எமது தேசிய போராட்டம், எமது பண்பாட்டு வாழ்வு, எமது தேசிய பொருண்மிய வளம், எமது தேசிய இனத்தின் வரலாறு ஆகியவற்றின் உண்மை நிலையும் பெறுமானமும் உணரப்படும் வகையில் பாடத்திட்டங்கள் வகுக்கப்படவேண்டும் இன்றைய அறிவியல் தொழில்நுட்பத்துறைகளின் வளர்ச்சியையும் அதன் ஆக்க பிரயோகங்களையும் கற்றறியும் வாய்ப்பும் எமது இளம் பரம்பரைக்கு இடுவதற்கு வழி செய்ய வேண்டும் ஒட்டுமொத்தத்தில், எமது தேசிய நலன் பேணப்படும் வகையில் கல்விச் சீர்திருத்தம் இடம்பெற வேண்டும். இந்த இலக்குகளை அடையும் வகையில் எமது அமைப்பான தமிழீழக் கல்விக் கழகம் ஆக்கபூர்வமான பணிகளை மேற்கொண்டு வருவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

# நெருக்கடிகளின் மத்தியில் தமிழ் மாணவர் சமுதாயம்

இன்று, தமிழீழத்தில் கல்வித்துறை சீரழிந்த நிலையில் உள்ளது. தமிழரின் கல்வியை திட்டமிட்ட வகையில் அரசு புறக்கணித்து வருகிறது. சிங்கள ஆயுதப்படைகளின் போர் நடவடிக்கைகளும் பொருளாதார நெருக்குதல்களும் நிலைமையை மேலும் மோசமாக்கி வருகிறது. எத்தனையோ நெருக்கடிகள் இடர்பாடுகளை எதிர்கொண்டு எமது மாணவ சமூகம் கல்வியைக் கற்கவேண்டியிருக்கிறது தமது ஆர்வத்தினாலும், திறமையினாலும், கடும் உழைப்பினாலும் கல்வி கற்று பொதுத்தேர்வுக்கு தயாரானாலும் உரிய காலத்தில் அவை நடைபெறுவதில்லை. தேர்வு நடைபெறும் காலங்களிலும் அரசபடைகள் அமைதியைக் குலைத்து விடுகின்றன. இத்தனை தடைகளையும் தாண்டித்தான் எமது மாணவர்கள் தேர்வுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கிறது.

இந்த சூழ்நிலையில் க.பொ.த. சாதாரண தர தேர்வுக்கு ஈடாக, முதல் தடவையாக தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வை தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை சிறப்புற நடத்தி முடித்திருக்கிறது இந்த முயற்சியை நான் மனப்பூர்வமாக பாராட்டுகிறேன். அத்துடன் இத் தேர்வில் தோற்றிய, தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

# நினைவில் நிறைந்தநாள்



# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**13-02-93**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8281

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

41-8823, 42-2323, 27-2034, 41-8292, 42-7975, 42-9345, 24-1576, 24 4481, 28 3476, 26 3183, 26-5782, 42-0970, 22 0777, 26-1371, 28-7978,

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

24-4707, 26-0672, 26-1989, 27-9030, 26-8746, 27-9052

# 1-ம் ஆண்டு நினைவு

பிறப்பு: 1976



இறப்பு: 1992



தமிழீழ விடுதலைப் புலிகளின்
ஆரம்பகால உறுப்பினரும்
மத்தியகுழு உறுப்பினருமாகிய

## லெப்டினன்ட் கேணல்
## பொன்அம்மான் (அற்புதன்)

(செல்லப்பா யோகரத்தினம குகன்)
(யாழ். இந்துவின் செல்வன்)

| அவனியில் உதயம்: | வான்வெளியில் அஸ்தமனம்: |
|---|---|
| 25 - 12 - 1956 | 14 - 02 - 1987 |

பொன்அம்மான் எங்கள் குகனே
வீரருள் வீரனே வீரதிலகனே
தமிழ்மண் மீட்கத் தலை நின்றவனே
தன்கடன் செய்து தன்னுயிர் விட்டவனே
வீரனை வணங்கும தமிழன் பண்பாட்டில்
வீரனே உனை நாம் வணங்குகின்றோம்
ஆறு ஆண்டுகள் அசைந்தனவாயினும்
வீறுகொண்ட உன் நினைவகலாது
அற்புதனே!

என்றும் உனை மறவா நன்றி நிறைநெஞ்சங்கள்
சகோதரர்கள், சகோதரி, மைத்துனி, மைத்துனன்
மக்கள், உறவினர்

கலட்டி,
யாழ்ப்பாணம்.

(சி-6012)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

திணிக்கவும் உருவாக்கப்பட்ட கல்வியமைப்பு மாற்றப்பட வேண்டும். எமது தேசிய போராட்டம், எமது பண்பாட்டு வாழ்வு, எமது தேசிய ... யில் எமது அமைப்பான தமிழீழக் கல்விக் கழகம் ஆக்கபூர்வமான பணிகளை மேற்கொண்டு வருவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

# நெருக்கடிகளின் மத்தியில் தமிழ் மாணவர் சமுதாயம்

இன்று, தமிழீழத்தில் கல்வித்துறை சீரழிந்த நிலையில் உள்ளது. தமிழரின் கல்வியை திட்டமிட்ட வகையில் அரசு புறக்கணித்து வருகிறது. சிங்கள ஆயுதப்படைகளின் போர் நடவடிக்கைகளும் பொருளாதார நெருக்குதல்களும் நிலைமையை மேலும் மோசமாக்கி வருகிறது. எத்தனையோ நெருக்கடிகள் இடர்பாடுகளை எதிர்கொண்டு எமது மாணவ சமூகம் கல்வியைக் கற்கவேண்டியிருக்கிறது தமது ஆர்வத்தினாலும், திறமையினாலும், கடும் உழைப்பினாலும் கல்வி கற்று பொதுத்தேர்வுக்கு தயாரானாலும் உரிய காலத்தில் அவை நடைபெறுவதில்லை தேர்வு நடைபெறும் காலங்களிலும் அரசபடைகள் அமைதியைக் குலைத்து விடுகின்றன. இத்தனை தடைகளையும் தாண்டித்தான் எமது மாணவர்கள் தேர்வுகளுக்கு முகம்கொடுக்க வேண்டியிருக்கிறது.

இந்த சூழ்நிலையில் க.பொ.த. சாதாரணதர தேர்வுக்கு ஈடாக, முதல் தடவையாக தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வை தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை சிறப்புற நடாத்தி முடித்திருக்கிறது இந்த முயற்சியை நான் மனப்பூர்வமாக பாராட்டுகிறேன். அத்துடன் இத் தேர்வில் தோற்றிய, தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## கல்விமேம்பாட்டுகழகத்திற்கு கல்விப்பணிப்பாளர்பாராட்டு

தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகம் ஆரம்பித்த காலம் தொட்டு இன்றுவரை பல அற்புதமான செயற்பாடுகளை செய்துவருகின்றது. ஆரம்பத்திலே கல்விக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் முரணானவர்கள் என்றொரு நிலையை மாற்றும் வகையிலே அவர்கள் எங்களுடன் இருந்து சோர்வுற்ற எமது கல்விச் செயற்பாடுகளுக்கு துணைநின்று வருகிறார்கள். இவ்வாறு தமிழீழ கல்விமேம்பாட்டுக்கழகத்தினரால் நேற்று நடாத்தப்பட்ட பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு யாழ். கல்விப் பணிப்பாளர் இரா.சுந்தரலிங்கம் அவர்கள் தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசுகையில்

யுத்தகாலத்திலே பரீட்சை நடைபெறாது பின்னர் யாழ்ப்பாணத்தில் பரீட்சையை நடாத்துவதற்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளை அணுகி எமது தேர்வுக்கு உதவி செய்யுங்கள் என்று கூற அவர்கள் அன்று வழங்கிய உதவியை இன்றுவரை வழங்குகின்றார்கள். அதேபோல பரீட்சைகள் நேரகாலத்துக்கு நடக்காததினாலே மாணவர்கள் அல்லல்பட்டு சலிக்கின்ற வேளையிலே அவர்கள் தொடர்ந்து படிக்கின்ற உயர்தர வகுப்பில் சேர்ந்து படிக்க வகை செய்கின்ற வகையிலே எமது தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை மிகவும் கச்சிதமாக சிந்தித்து இந்த முன்னோடிப் பரீட்சையை நடாத்துவதற்கு திட்டமிட்டு அதில் வெற்றியும் கண்டுள்ளது என்றார். (சி) (பா)

### தலைவரின்

தாங்கிய அருட் திரு. யோசப் அடிகளாரின் தலைமையுரையைத் தொடர்ந்து வரவேற்புரையை யாழ் இந்துக் கல்லூரி அதிபர் அ. பஞ்சலிங்கம் நிகழ்த்தினார்.

தமிழீழ பொதுக் கல்வித் தேர்வு சிறப்பு தகைமைபெற்ற மாணவர்களுக்கு பாராட்டும் பரிசும் வழங்கப்படுவதை யொட்டி தமிழீழ தேசிய தலைவரினால் வெளியிடப்பட்ட அறிக்கையினை தமிழீழ கல்விப் பொறுப்பாளர் வே. இளங்குமரன் அவர்கள் வாசித்ததைத் தொடர்ந்து சிறப்புரைகளை விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அ. துரைராஜா இரா. சுந்தரலிங்கம், ஆசிரியர்கள் சார்பாக பி. விக்கினேஸ்வரன் அருந்தவநாதன் தமிழீழ கல்விப் பொறுப்பாளர் வே. இளங்குமரன் ஆகியோர் நிகழ்த்தினர். அதனைத் தொடர்ந்து இறுதி நிகழ்வாக தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் சிறப்பு தகைமைகளைப் பெற்ற மாணவர்களுக்கு தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினரால் வழங்கப்பட்ட சான்றிதழ். பதக்கம் 500 ரூபா ரொக்கப் பணம் மற்றும தமிழீழ தேசிய தலைவரினால் வழங்கப்பட்ட சான்றிதழ் 5000 ரூபா ரொக்கப்பணம் என்பவற்றினை மாணவர்களுக்கு பேராசிரியர் அ. துரைராஜா, இரா. சுந்தரலிங்கம் தமிழீழ அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் ஆகியோர் வழங்கினர். தொடர்ந்து தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை செயலாளர் சண்முகநாதபிள்ளை நன்றியுரை வழங்கினார். தமிழீழ தேசிய கொடியிறக்குதலுடன் விழா இனிது நிறைவெய்தியது. (பா) (சி)

## தமிழீழ கல்வித்தேர்வு கல்வி பாதிப்பை நீக்குகிறது

### - பரிசுபெற்ற மாணவன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

"சிறிலங்கா அரசின் தற்போதைய கல்விக்கொள்கையால் தொடர்ச்சியாக ஏற்பட்டுவந்த கல்விப் பாதிப்புகளில் இருந்து மாணவர்கள் மீட்சி பெறுவதற்கு தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வு புதிய வழியை எமது மாணவர்களுக்கு அமைத்துக் கொடுத்துள்ளது."

இவ்வாறு தமிழீழ கல்வி மேமபாட்டு பேரவையினரால் நடாத்தப்பட்ட தமிழீழப் பொதுக்கல்விப் பரீட்சைக்கு தோற்றி தேசியப் பரிசு பெற்ற குணசேகரம் யூட்ரைறோன் (யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரி) என்ற மாணவன் நேற்று காலை யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி பரீட்சையில் சிறப்புத் தகைமையடைந்த மாணவர்களைக் கௌரவித்து நடைபெற்ற பரிசளிப்பு மற்றும் பாராட்டு விழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையில் தெரிவித்தார்.

இம் மாணவன் தொடர்ந்து பேசுகையில் கெடுபிடி மிக்க சிறிலங்கா அரசின் கல்விக் கொள்கையினால் எமது பாடசாலை வாழ்க்கையில் அதிக காலம் அநியாயமாக்கப்பட்டு

(5 ஆம் பக்கம் பார்க்க)

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

41-8823, 42-2323, 27-2034, 41-8292, 42-7975, 42-9345, 24-1576, 24 4481, 28 3476, 26 3183, 26-5782, 42-0970, 22 0777, 26-1371, 28-7978,

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

24-4707, 26-0672, 26-1989, 27-9030, 26-8746, 27-9052

## 1-ம் ஆண்டு நினைவு



| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 1976 | 1992 |
| 02 | 02 |
| 08 | 26 |

செல்வி
### சுப்பிரமணியம் கலாரஞ்சிதம்
(மறவகுறிச்சி, பூநகர)

திதி: 14.02.93

உனது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்,

பெற்றோர், சகோதரர்கள்,
மாமன் (தா. அரியரெட்னம்)

(சி-6018)

## மரண அறிவித்தல்
### ஐயாத்துரை வள்ளிப்பிள்ளை

புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற ஐயாத்துரையின் அன்பு மனைவி வள்ளிப்பிள்ளை புங்குடுதீவில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற தம்பிமுத்து, காலஞ்சென்ற மருதப்பு. பொன்னம்மா. நாகம்மா, அன்னமமா ஆகியோரின் சகோதரியும் துரைசிங்கம், ஆனந்தமூர்த்தி [கிளிநொச்சி] காலஞ்சென்ற துரைராசா, கனகரெத்தினம் (புங்குடுதீவு) சுந்தரலிங்கம் (ஜேர்மனி) தணிகாசலம் (ஜேர்மனி) சோமசுந்தரம் (ஜேர்மனி), கணேசமூர்த்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் வவளிநாயகி. பொன்னம்மா. நாகலெட்சமி (கனடா). பத்தினிதேவி [கிளிநொச்சி] திலகவதி குணவதி [ஜேர்மனி] கண்ணம்மா [ஜேர்மனி] கமலாதேவி [கனடா] ஆகியோரின் மாமியாருமாவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் புங்குடுதீவில் நடைபெற்றன. இதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

115/23 நாவலர் வீதி,
முஸ்லிம் தெரு
யாழ்ப்பாணம்.
[4283]

தகவல்
ஐ துரைசிங்கம் (மகன்)
திருமதி தி. சுந்தரலிங்கம்
[மருமகள்]